2016 பிப்ரவரி 18]

கவனத்திற்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

75—

ஆரம்ப சுகாதார நிலையம்

***52279—திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், குண்டலப்பல்லி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், குண்டலப்பல்லி ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க துறைரீதியாக ஆய்வு நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. வருங்காலங்களில் இடைவெளியினுடைய அடிப்படையில், முன்னுரிமை கொடுத்து வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், குண்டலப்பல்லி ஊராட்சி ஒரு வனப் பகுதி கிராமம் ஆகும்.*

நிறைய மலைகளும், வனங்களும் சுற்றியுள்ள இந்தப் பகுதியில், சுமார் 6, 7 கிராமங்கள் உள்ளன. இங்கு வாழ்கின்ற மக்களுக்கு ஒரு சிறிய உடல் நலக் குறைவு ஏற்பட்டாலும், 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பேரணாம்பட்டுக்குச் செல்ல வேண்டும். அதுவும் சரியான போக்குவரத்து வசதி இல்லாத பகுதி அது. தற்போது இங்கு ஒரு தாய்–சேய் நல விடுதி செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால், செவிலியர்கள் அங்கு தங்குவது கிடையாது. போக்குவரத்து வசதியே இல்லாத இந்தப் பகுதிக்கு, ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 5 ஆண்டுகளில் 187 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை உருவாக்கி வரலாற்றுச் சாதனை படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மிக அதிகமான ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தொடங்கி, தமிழகத்தை நோயற்ற மாநிலமாக உருவாக்கிய பெருமை நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களைச் சாரும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியிலே, அவர் குறிப்பிடுகின்ற பேரணாம்பட்டு ஒன்றியத்திலேகூட மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்தப் பொற்கால ஆட்சியில், பேரணாம்பட்டு நகர்ப்புற சுகாதார நிலையம் Urban P.H.C.–டி.டி. மோட்டூர், அரவட்லா போன்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். வருங்காலங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

2016 பிப்ரவரி 18]

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே டி.டி. மோட்டூர், நரியம்பட்டு போன்ற பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், போக்குவரத்து வசதியே இல்லாத, ஆந்திர மாநில எல்லையோரம் இருக்கின்ற ஒரு வன கிராமம் இது. யானைகள் மட்டுமல்ல; சிறுத்தைகளும், விஷ ஜந்துக்களும் அதிகமாக இருக்கின்ற வனப் பகுதி இது. எனவே, இந்தப் பகுதியில் ஒரு சிறிய உடல் நலக் குறைவு ஏற்பட்டாலும், அவர்கள் 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பேரணாம்பட்டுக்கு செல்ல வேண்டியிருப்பதால், அங்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க தங்கள் வாயிலாகக் கோருகிறேன்.*

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மலைப் பகுதிகளில் உள்ள மக்களுக்காகத்தான் நடமாடும் மருத்துவக் குழுத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சிந்தனையால் இந்த சீர்மிகு திட்டம் "மக்கள் மருத்துவமனையைத் தேடி வர வேண்டாம்; நடமாடும் மருத்துவமனை, மக்களைத் தேடி வருகிறது" (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அடிப்படையில், இதுபோன்ற பகுதிகளில் 416 நடமாடும் மருத்துவக் குழுக்கள் தமிழ்நாடு முழுவதும் சிறப்பாகச் சேவை புரிந்து வருகின்றன. உங்கள் ஒன்றியத்திலும் அந்த நடமாடும் மருத்துவக் குழு சேவை புரிந்து வருகின்றது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அது 'வனப் பகுதி' என்று குறிப்பிடுகின்ற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கனிவோடு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு) ஒரு முக்கியமான அறிவிப்பு இருக்கிறது, உட்காருங்கள்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

மூத்த குடிமக்கள் சென்னை மாநகரப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணிக்கும் வசதி குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தபின், தமிழக மக்களின் நலன் காக்கும்வகையில் எவ்வாறெல்லாம் செயல்படும் என்பதுபற்றி அப்போது வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் மிகத் தெளிவாக நாங்கள் குறிப்பிட்டிருந்தோம். 'இதய தெய்வம் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் காட்டிய வழியில் எங்களது புனிதப் பயணம் அமையும்' என்ற வாக்குறுதியை அளித்திருந்தோம். 'தமிழகம் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பாதையில் பீடு நடை போட நடவடிக்கை எடுக்கப்படும்' என்றும், 'கல்வி, மருத்துவம் விவசாயம், நதி நீர், அடிப்படைக் கட்டமைப்பு, வீடு, மின்சாரம் மற்றும் தொழில் துறை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்' என்றும், 'தமிழ் இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் தலைநிமிர்ந்து சொந்தக்காலில் நிற்பதற்கான வழிவகுக்கப்படும்' என்றும், எங்களது இலட்சியத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். இந்த இலட்சியத்தை எய்துவதற்கு, துறைதோறும் எடுக்க உள்ள நடவடிக்கைகள்பற்றியும் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம்.